BECON (ஸ்ரீதர் சினிமா முன்பாக)
வாழ்
DAY CLASS
87 A/L
MATHS: திரு. நல்லையா
PHY: திரு. மணியம்
CHE: திரு. செல்வா, சிவநாதன்
BOT: திரு. சரவணந்தா
ZOO: திரு. செங்கா
ஆரம்பம். 15 9 86
திங்கள் 9 30

Registered as a Newspaper

உதயன்

விலை ரூ. 1/=

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

DAY CLASS
பொருளியல் - திரு. வரதராஜன்
வர்த்தகம் - திரு. ரட்ணம்
கணக்கியல் - திரு. மகிந்தன்
அளவையியல் - திரு.எஸ்.எல். மனோகரன்
இந்துநாகரிகம் - திருமதி. அருள்நங்கை
தமிழ் - திரு. நாகேஸ்வரன்
புவியியல், அரசியல், - பிரபல ஆசிரியர்கள்
ஆரம்பம்: 15-9-86
திங்கள் 9 மணி

சுடர்- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஸ்ரீ ஆவணி மீ 27 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 முஹறம் பிறை 7 (12-09-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY ஒளி: 253

லக்ஸபான தொடர்பு துண்டிப்பு:

பிரதான மின் கோபுரம் குண்டினால் தகர்ப்பு

திருகோணமலை மாவட்டம்

பூரணமாக இருளில் மூழ்கியது

— திருமலை மாவட்டச் செய்தியாளர் —

திருகோணமலை, செப்டம்பர், 12

திருகோணமலை மாவட்டத்துக்கு லக்ஸபான மின்சாரம் வழங்கும் வயர்களைத் தாங்கி நிற்கும் பிரதான கோபுரங்களில் (ரவர்களில்) ஒன்று புதன்கிழமை இரவு குண்டுகள் வைத்துத் தகர்க்கப்பட்டது: இதைத் தொடர்ந்து திருகோணமலை மாவட்டம் முழுவதும் இருளில் மூழ்கியது

புதன்கிழமை இரவு 11மணி அளவில் தம்பலகமத்துக்கு அருகில் 96 ஆம் கட்டையில் அடுத்தடுத்து நான்கு குண்டுகள் வெடித்தன.

குண்டு வெடித்த சத்தங்கள் திருமலை நகருக்கே கேட்டன.

அதைத் தொடர்ந்து திருமலை மாவட்டமே கும்மிருட்டில் மூழ்கியது இதந்த பின்னர்தான் மின்கோபுரம் தகர்க்கப்பட்ட விஷயம் வெளியானது.

ஒரு லட்சத்து 34ஆயிரம் கொவாட்ஸ் மின்சாரத்தைக் கடத்தும் வயர்களைத் தாங்கி நிற்கும் கோபுரங்களில் ஒன்றே தகர்க்கப்பட்டது.

திருமலைப்பட்டினம், சினக்குடா, கிண்ணியா, நிலாவெளி, புல்மோட்டை, மூதூர், சேருவில, கந்தளாய், பன்குளம், தம்பலகமம் ஆகிய பகுதிகள் இதனால் இருளில் மூழ்கின.

தற்காலிக மின்சார விநியோகத்தைக் கூட ஆரம்பிப்பதற்கு இன்னும் ஒருவாரகாலம் செல்லும் என்று மின்சாரசபைப் பொறியியலாளர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

நிரந்தரமாகத் திருத்த ஒரு மாதத்துக்கு மேல் செல்லும் என்றும் அவர் மேலும் சொன்னார். (உ-எ-150)

கைதானோர் தாக்கப்பட்டனராம்

திருகோணமலை, செப் 12

நேற்று முன் தினம் அன்புவழிபுரம், செல்வநாயகபுரம் பகுதிகளில் தேடுதலின்போது கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டவர்கள் தாங்கள் விசாரணையின்போது கடுமையாகத் தண்டிக்கப்பட்டதாக திருமலை பிரஜைகள் குழுவிடம் முறையிட்டனர்.

கைது செய்யப்பட்ட சுமார் 400 பேரில் அதே தினம் சுமார் 225 பேர் விடுவிக்கப்பட்டனர்.

மிகுதிப் பேர்கள் கோட்டை இராணுவ முகாமுக்குக் கொண்டு போகப்பட்டனர், அவர்களில் மேலும் 50 பேர் வரையில் நேற்று விடுவிக்கப்பட்டனர் மிகுதியானோர் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர். (உ-எ-150)

கன்னங்குடாவில் மற்றொரு முகாம்

மட்டக்களப்பு செப். 12

மட்டக்களப்புப் பகுதிகளில் பலத்த தேடுதலில் ஈடுபட்டு வந்த பாதுகாப்புப் படையினர், நேற்று கன்னங்குடாவில் புதிய முகாம் ஒன்றை அமைத்தனர்

அரச கட்டடம் ஒன்றில் இம்முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

500 க்கு அதிகமான சிப்பாய்கள் இரண்டு தினங்களாக படுவான் கரையில் தேடுதலில் ஈடுபட்டு வந்தனர். அப்போது முதலாவது முகாமை வவுணதீவு நெற் சந்தைப்படுத்தும் ஸ்டோரில் அமைத்தனர் என்பது தெரிந்ததே. (உ-எ21)

இராணுவப் பிக்கு!

கொழும்பு, செப். 12

நுகேகொடையில் கார் ஒன்றை மறித்துப் பொலீஸார் சோதனையிட்டபோது இராணுவச் சீருடைகள், தோட்டாக்களுடன் பிக்கு ஒருவர் இருந்ததைக் கண்டனர்.

பிக்கு கைது செய்யப்பட்டார்.

பிக்கு, ஜே. வி. பி. ஆதரவாளர் என்று சந்தேகிக்கப்படுகின்றது (அ.இ.எ)



இலங்கைப் பனை அபிவிருத்திச் சபை யாழ். பீச் இன்னில் நடத்திய பனம் பொருள் உணவு அறிமுக விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ், மறை மாவட்ட ஆயர் அதி வந். கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை பனம் பழத்தினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட பனம் பழ வடிவிலான கேக்கை வெட்டி கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதையும் அருகில் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு க. நடராசா நிற்பதையும் காணலாம். (●)

கடத்தல்

யாழ்ப்பாணம், செப். 12

அனுராதபுரத்திலிருந்து வவுனியாவுக்குச் சீமெந்து ஏற்றி வந்த லொறி ஒன்று நேற்று இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டது.

கடத்தப்பட்ட லொறி பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமானது. (இ.10)

முச்சந்தி முனி

தன்வினை தன்னைச் சுடும், ஓட்டப்பம் வீட்டைச் சுடும் என்று தமிழ் முதுமொழியை அனுபவத்தோடை தானே சொல்லி வைச்சவை.. பார்த்தியே நடந்ததை?

ராஜீவின் ஹராரே பேச்சு ஜனாதிபதிக்குக் கவலை

டிக்ஷிற்றிடம் அதனைத் தெரிவித்தார்

கொழும்பு, செப். 12

பிரதமர் ராஜீவ் காந்தி ஹராரே செய்தியாளர் மாநாட்டில் இலங்கை பற்றி தெரிவித்த கருத்துக்கள் குழப்பத்தையும் கவலையையும் தந்துஇருப்பதாக ஜனாதிபதி ஜெயவர்த்தனா தெரிவித்திருக்கிறார்.

எனினும் இந்திய உதவியுடன் இனப்பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலம் தீர்வுகாணவே விரும்பும் என்பதில் இலங்கை அரசு கொண்டுள்ள நாட்டம் குறைந்துவிடவில்லை என்று ஜனாதிபதி, தன்னைச் சந்தித்த இந்தியத் தூதர் டிக்ஷிற்றிடம் தெரிவித்தார்.

— இப்படி ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியப் பிரதமர் ஹராரேயில் வெளியிட்ட கருத்துக்களைப்பற்றி விளக்கமளிக்கவே திரு. டிக்ஷித் இச்சந்திப்பைப் பயன்படுத்திக்கொண்டார் என்று தெரிகின்றது.

இந்தியப் பிரதமரின் கூற்றுக்களில் உள்ள தார்ப்பரியமான உண்மைகளை திரு. டிக்ஷித் ஜனாதிபதியிடம் எடுத்துச் சொன்னார்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்திய அரசின்

(4ஆம் பக்கம் பார்க்க)

3ஆம் கட்டப் பேச்சு

போராளி அமைப்புகளை அழைப்பது அரசின் போக்கில் தங்கியுள்ளது

புதுடில்லி, செப்டம்பர். 11

இனப்பிரச்சினை சம்பந்தமான மூன்றாம் கட்டப் பேச்சுக்களில் கலந்து கொள்ளுமாறு. தமிழ்ப் போராளிகளை அழைக்கும் விடயம். இலங்கை அரசு தமிழ் மொழிப்பிரதிநிதியத்தை வழங்குவதற்கு எந்தளவுக்கு உடன்பாடாக உள்ளது என்பதைப் பொறுத்ததாகும்.

இவ்வாறு இந்திய அரசாங்க வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன.

இதேவேளை இந்திய அரசு இலங்கை அரசாங்கத்திடம் புதிய உறுதிமொழி ஒன்றைத் தருமாறும் கேட்டிருக்கிறது.

தமிழ்ப்போராளிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைப்பதற்கான முதற்தேவை சம்பந்தமான புதுடில்லி அரசின் கருத்து இலங்கை அரச வட்டாரங்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாம்.

இதனிடையில் கடந்த செவ்வாய். இலங்கைத் தூதர் பெர்னாட் திலகரத்தின, புதுடில்லியில் இந்திய வெளியுறவுச் செயலாளர் ஏ. பி. வெங்கடேஸ்வரனைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

இதேவேளை இந்திய அரசாங்கம் இலங்கை அரசிடம் இருந்து இன்னொரு உறுதிமொழியை எதிர்பார்த்துக் காத்து

(4ஆம் பக்கம் பார்க்க)

பருத்தித்துறையில் ஷெல் தாக்குதல் தொடருகிறது

பருத்தித்துறை, செப்,12

பருத்தித்துறையில் நேற்று தொடர்ந்து ஐந்தாவது நாளாக பாதுகாப்புப் படையினர் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்;

நேற்றுக்காலை 10-00 மணி அளவில் நூற்றுக்கணக்கான சிப்பாய்கள் முகாமிலிருந்து நடராசா கலை அரங்கு வழியாக வெளியேற முயற்சித்தார்கள்.

அச்சமயம் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் 'கவன் சார்ஜ்' முறையில் அவர்களைத் தாக்கினார்கள்.

இத்தாக்குதலில் சில சிப்பாய்கள் பலியானதாகவும் பலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த சிப்பாய்களை எடுத்துச் செல்ல வந்த ஹெலிக்கொப்டர் இரு தடவைகளும் தரை இறங்க முடியாமல் திரும்பியது.

இதனை அடுத்து வான் படை உதவிக்கு அழைக்கப்பட்டது.

கடற்படையினர் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளான தும்பளை, கலட்டி, உபய கதிர்காமம், மந்திகை, தம்பசிட்டி மாயக்கை. ஆகிய பகுதிகளை நோக்கிப் பீரங்கிகளையும் ஷெல் தாக்குதல்களையும் நடத்தினர்.

இதனால் இப்பகுதி மக்

(4-ஆம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்புப் பகுதியில்

தாளங்குடாவில் நேரடி மோதல்

2 பொலீஸார் பலி! 8 பேர் காயம்

மட்டக்களப்பு,செப் 12

மட்டக்களப்பு, தாளங்குடா என்னுமிடத்தில் பொலீஸாருக்கும் போராளிகளுக்கும் இடையே நேற்று பிற்பகல் நடைபெற்ற நேரடி மோதலில் இரண்டு பொலீஸார் கொல்லப்பட்டனர். எண்மர் காயமடைந்தனர்

போராளிகள் தரப்பில் எதுவித சேதமும் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றித் தெரிய வருவதாவது:

மட்டக்களப்பு— கல்முனை வீதியில் தாளங்குடா உள்ளது.

நேற்றுக்காலை மட்டக்களப்பில் இருந்து ஜீப்பில் அம்பாறைக்கு சென்ற பொலீஸார் சிலரை அங்கு இறக்கிவிட்டு பிற்பகல் 3 மணியளவில் திரும்பி வந்து கொண்டிருந்தனர்.

தாளங்குடாவை அண்மியதும் பொலீஸார் சிலர் இறங்கி நடந்து வீதியின் இரு மருங்கையும் சோதனையிட்டுக் கொண்டு வந்தனர்.

சுற்றிவளைத்தனர்

மதகு ஒன்றைக் குனிந்து சோதனை இட்டுக் கொண்டு இருந்த பொலீஸ் கோஷ்டியை திடீர் என்று போராளிகள் சுற்றி வளைத்துக் கொண்டனர்.

தொடர்ந்து இருதரப்பினருக்கும் இடையில் சுமார் ஒரு மணித்தியால நேரம் நேரடி மோதல் நிகழ்ந்தது

இந்த மோதலில் சார்

(4.ஆம் பக்கம் பார்க்க)

ஊர்வலம் நடத்த முஸ்தீபு

யாழ்ப்பாணம், செப், 12

தமது கல்லூரி மீதான ஷெல் தாக்குதலை ஆட்சேபித்து யாழ் மத்திய கல்லூரி மாணவர்களும் வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளும் கூட்டாகச்சேர்ந்து ஊர்வலம் ஒன்றை நடத்த ஆலோசித்து வருகின்றனர் என்று தெரிகிறது (ஆ-10)

சுபநேரம்

12—9—1986
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:
6.03 முதல் 7.33 வரை
ராகுகாலம்:
10 33 முதல்12 03 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

நவமி முன்னிரவு
9 50 வரை
ஆவணி மூலம்
குங்கிலியக் கலயநாயனார்
குரு பூஜை

அரசியல்வாதியின் வயோதிபத்தாயார் சூட்டுக்குப்பலியானார்

கல்முனையில் மீண்டும் பதற்றம்

கல்முனை, செப் 12

கல்முனைத் தொகுதியில் தமிழரசுக் கட்சி வேட்பாளராக 1970 தேர்தலில் போட்டியிட்ட ஜனாப் உதுமாலெப்பையின் வயோதிபத் தாயார் (வயது 75) நேற்று முன்தினம் இரவு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

இது பற்றிக் கூறப்படுவதாவது:

இரண்டாவது தரம் இடம் பெற்ற கல்முனைக் கலவரத்தின் போது இறந்த முஸ்லிம் ஒருவன் 31 ஆவது தினம் நேற்று முன் தினம் அனுட்டிக்கப்பட்டது.

அப்போது ஆயுதம் தாங்கிய முஸ்லிம் கோஷ்டி ஒன்று கல்முனைக்குடியிருப்புப் பக்கமாக துப்பாக்கியால் சுட்டபடியும் கிரனேட் வீசியபடியும் போந்து சென்

(4ஆம் பக்கம் பார்க்க)

பருத்தித்துறையில்

டாக்டர்கள் நேற்று அடையாள வேலைநிறுத்தம்

பருத்தித்துறை; செப் 12

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை டாக்டர்கள் நேற்று மூன்றுமணி நேரம் அடையாளவேலை நிறுத்தம் செய்தனர்.

பருத்தித்துறை மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி அவமதிக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கு முகமாகவே இந்த அடையாள வேலைநிறுத்தம் நடைபெற்றது.

அடையாள வேலை நிறுத்தம் காலை 8-30 மணிதொடக்கம் 11-30 மணிவரை நடைபெற்றது

அச்சமயம் இளைஞர் கோஷ்டி ஒன்று இந்த விவகாரத்தில் தலையிட்டு நெருக்கடி நேரத்தில் இவ்வாறான வேலைநிறுத்தத்தைக் கைவிடுமாறு கோரிக்கை விடுத்தது

டாக்டர்கள் அனைவரும் சேர்ந்து கூட்டாக இதுவிடயத்தை யாழ் மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரிக்கு அறிவிப்பதாகத் தீர்மானித்தார்கள்.

வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

நேற்று வெளிநோயா

(4ஆம் பக்கம் பார்க்க)

புலிகள் - சிப்பாய்கள் காரைநகரில் மோதல்

—அலுவலகச் செய்தியாளரும், காவலூர் செய்தியாளரும்—

யாழ்ப்பாணம், செப் 12

காரைநகரில் நேற்று கடற்படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் இரண்டு மணி நேர கடுமையான சண்டை நடைபெற்றது.

நேற்றுக்காலை ஒன்பது மணி அளவில் விடுதலைப் புலிகளின் படகு ஒன்றை காரைநகர் கடற்பகுதியில் வைத்து மறித்த கடற்படைப்படகு ஒன்று அதனைநோக்கி தாக்குதல் நடத்தியது.

இவர்களுக்கு உதவியாக ஒரு கடல் விமானமும் இரண்டு ஹெலிக்கொப்டர்களும் தாக்குதல் மேற்கொண்டன.

எனினும் பாதுகாப்பாக கரை ஒதுங்கிய போராளிகள் கடற்படையினரின் படகுகள் மீது திருப்பித் தாக்குதல் நடத்தினர்

சுமார் இரண்டு மணி நேரமாக தாக்குதல்கள் நீடித்தன

இதேவேளை கடற்படைப் படகுகள் கடலிலிருந்து நகரப்பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்

(4ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

விளையாட்டரங்கு

சுன்னாகம் றேயல் விளையாட்டுக்கழக சுற்றுப் போட்டிகள்

சுன்னாகம், செப். 12
சுன்னாகம் றேயல் விளையாட்டுக் கழகத்தினரின் 11 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு பல சுற்றுப் போட்டிகள் ஒழுங்கு செய்யப்படுகின்றன.

12 ஓவர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டி, கரப்பந்தாட்டப்போட்டி, (ஓவர்சேவ்) செற்அப் முறையிலான கரப்பந்தாட்டப்போட்டி முதலியன நடத்தப்படவுள்ளன.

பங்கு பெற விரும்பும் கழகங்கள் இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் தாசன் செல்லச்சாமி விளையாட்டுப் பொறுப்பாளர், றேயல் விளையாட்டுக்கழகம், சுன்னாகம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்படுகின்றனர். (இ-27)

உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், செப். 12
நாச்சிக்குடா சென். மேரிஸ் விளையாட்டுக்கழகமும் தேவண்டிப்பிட்டி சென் சேவியர் விளையாட்டுக்கழகமும் சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி ஒன்றில் அண்மையில் மோதின.

சென்.மேரிஸ் ஏ விளையாட்டுக்கழகமும் சென். சேவியர் விளையாட்டுக் கழகமும் மோதியதில் 2—0 என்ற கோல் அடிப்படையில் சென் மேரிஸ்கழகம் வென்றது.

சேவியர் விளையாட்டுக்கழகமும் சென் மேரிஸ் 'பி' விளையாட்டுக்கழகமும் சென் சேவியர் விளையாட்டுக் கழகமும் மோதியதில் 3—0 என்ற கோல் அடிப்படையில் சென். மேரிஸ் வென்றது (இ-10)

வட இலங்கையில் ஹோமியோபதி வைத்தியக் கல்லூரி

யாழ்ப்பாணம், செப் 12
வட இலங்கையில் ஒரு ஹோமியோபதி வைத்தியக் கல்லூரியை அமைக்க சுகாதார அமைச்சிடம் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது.

வட இலங்கை ஹோமியோபதி சபை இதற்கான அங்கீகாரத்தை சுகாதார அமைச்சிடம் கோரியுள்ளது

சபையின் செயலாளர் திரு. ம. வேலுப்பிள்ளை இது தொடர்பாக சுகாதார அமைச்சுக்கு அனுப்பியுள்ள மகஜரில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:-

இலங்கை ஹோமியோபதி சபை தெரிவுசெய்யப்பட்டு பத்து வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன.

இத்துறையை வளர்ப்பதற்கென, ஹோமியோபதி சட்டத்தில் வகுத்துள்ளவாறு இவ்வைத்தியக் கல்லூரி இதுகாலவரை அமைக்கப்படாமை வருந்தத்தக்கது.

இவ்வாறு கூறப்பட்டுள்ளது. (இ-9)

சிங்களவர்களுடன் சேர்ந்து முஸ்லிம்கள் ஆட்சி அமைக்கலாம் என்பது ஏற்கக்கூடிய வாதமல்ல

முஸ்லிம் பிரமுகர் கூறுகிறார்

மட்டக்களப்பு, செப் 12
இனப்பிரச்சினைத் தீர்வுக்கு மாகாணசபை யோசனையை முஸ்லிம்கள் வரவேற்கிறார்கள். இந்த யோசனை அமுலுக்கு வந்தால் முஸ்லிம்கள் தமிழ் மக்களை ஒதுக்கி விட்டு சிங்களவர்களுடன் இணைந்து ஆட்சி அமைக்க முயல்வர் என்பது ஏற்றுக்கொள்ள முடியாத வாதம்

மேற்கண்டவாறு ஏறாவூர் பட்டினசபை முன்னாள் தலைவரும் சிரேஷ்ட அரசியல்வாதியுமான ஜனாப். எம். ஏ. வி ஏ. ரஹ்மான் தெரிவித்தார்.

இனப்பிரச்சினை யோசனைகள் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்.

இணைப்போ, அல்லது மாகாண சபையோ கிழக்கு வாழ் முஸ்லிம்களின் ஆதரவின்றி அமையமுடியாது.

பிரதேச இணைப்பை முஸ்லிம்கள் எதிர்ப்பதற்குக் காரணம் பெரும்பான்மை குறைந்துவிடும் என்பதற்காகவே என கருதுவது தவறானது. இணைப்பு இல்லாவிட்டாலும் நாம் சிறுபான்மை தான்.

வடக்கு - கிழக்கு பெரும்பான்மை மக்களால் எமது சமய கலாசாரத்திற்கு ஊறு ஏற்படலாமென்ற சந்தேகத்தினால் தான் இணைப்பை முஸ்லிம்கள் எதிர்க்கிறார்கள்.

சமீபகாலங்களில் தமிழ்ப் போராளிகளின் பேரால் இடம்பெற்ற வரிக் கொள்ளை, ஆள் கடத்தல் போன்ற சம்பவங்கள் எம்மை பெரிதும் பாதித்தன.

கிழக்கு வாழ் தமிழ் பேசும் முஸ்லிம்களின் உதவியை ஓரளவுபெற்று விடுதலைப் போராட்டம் நடத்தும் இக்காலகட்டத்தில் இப்படி நடந்தால் தமிழர் ஆட்சி அமைத்த பின் எப்படியிருக்கும் என்ற முஸ்லிம்களின் ஏக்க நிலையை போராளிகள் எண்ணிப் பார்க்க வேண்டும்;

இந்நிலையில் சிறுபான்மை முஸ்லிம்கள், மாகாண சுயாட்சியின் மூலம் பெரும்பான்மைத் தமிழ் மக்கள் நடந்து கொள்ளும் நிலையை அவதானித்தே காலப்போக்கில் இணைப்பை ஆதரிப்பார்கள்.

இப்படி அவர் கூறினார். (இ-21)

பரமஹம்சரின் ஜயந்தி தினம்

பருத்தித்துறை செப். 12
ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் 150ஆவது ஆண்டு ஜயந்தி விழா பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம விரிவுரை மண்டபத்தில் 17ஆம் திகதி புதன்கிழமை காலை நடைபெறும்.

விழா சுவாமி சித்ரூபானந்தா தலைமையில் நடைபெறும்

அன்று சட்டத்தரணி திரு. க. முத்துக்குமார் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

இறுதியில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண உதவிகளை திருமதி மு. க. முருகானந்தன் வழங்குவார். (இ-118)

கல்முனையில் புனர்வாழ்வு கழகம்

மட்டக்களப்பு செப். 12
கல்முனையில் அண்மையில் ஏற்பட்ட சமூக மோதல்களில் பாதிக்கப்பட்ட அகதிகள் நலன்களைக் கவனிப்பதற்காக புனர்வாழ்வுக் கழகம் சிரேஷ்ட சட்டத்தரணி ஜி குமாரலிங்கம் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (இ-21)

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

பாதுகாப்பு அமைச்சு செயலாளரிடம் அரச அதிபர் முறையீடு

கொழும்பு செப், 12
யாழ் ஆஸ்பத்திரி மீது நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல் பற்றி அரச அதிபர் திரு எம் பஞ்சலிங்கம் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சேபல ஆட்டிக்கலயிடம் தொலைபேசி மூலம் முறையிட்டார்.

ஆஸ்பத்திரியை தாக்கிய ஷெல் குண்டின் பகுதிகளையும் ஆஸ்பத்திரி நிர்வாகிகள் என்னிடம் ஒப்படைத்துள்ளனர்" என்றும் அரச அதிபர் அமைச்சுச் செயலாளரிடம் தெரிவித்தார்.

"அமைச்சர் நாடாளுமன்றம் சென்றுவிட்டார். வந்தவுடன் தெரிவிக்கின்றேன்" — என்று அமைச்சுச் செயலாளர் அரச அதிபருக்குத் தெரிவித்தார். (இ-எ)

கல்வியூட்டல் தினம்

சாவகச்சேரி செப். 12
சர்வதேச கல்வியூட்டல் தினம் அறவழிப் போராட்டக் குழுவினரால் யாழ் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து சாவகச்சேரியில் கொண்டாடப்பட்டது (இ-31)

மரக் கூட்டுத்தாபன களஞ்சியங்களில் மரம் இல்லை

அரச அதிபரிடம் மகஜர்

சுன்னாகம், செப் 12
அரச மரக்கூட்டுத்தாபனக் களஞ்சியங்களில் மரம் இல்லாததால் வீட்டு பாவனையாளர்களும் பாண் போறணையாளர்களும் தேனீர்ச் சாலைகளின் உரிமையாளர்கள் ஆகியோர் அவஸ்தைப்படுகிறார்கள்.

யாழ் அரச அதிபர் திரு எம் பஞ்சலிங்கத்துக்கு சுன்னாகம் பிரஜைகள் குழு இது தொடர்பான மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளது.

வேலிக்கட்டை, தடி முதலியன இல்லாததால் முந்திரிகை வளர்ப்போர் பெரிதும் பாதிப்புள்ளாகி உள்ளனர் என பிரஜைகள் குழு தலைவர் திரு. தி. மாணிக்கவாசகர் தமது மகஜரில் மேலும் குறிப்பிடுகின்றார். (இ-27)

தமிழ்த்தின விழா

யாழ்ப்பாணம், செப். 12
வண்ணார்பண்ணை இளையதம்பி இந்து வித்தியாலயத்தில் நாளை சனிக்கிழமை காலை 8 மணி தொடங்கி தமிழ்த்தினப் போட்டிகளும் பரிசளிப்பு விழாவும் நடைபெறும்.

மாணவர்களின் வாசிப்பு, எழுத்து, ஆக்கம், பாவோதல் ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசுகள் வழங்கப்படும்.

வித்தியாலய அதிபர் திரு. கா. கணேசதாசன் தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்தில் முதன்மை விருந்தினராக நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி சு. சிவநாயகமூர்த்தி கலந்து கொள்கிறார். (இ

உரக்களஞ்சியம்

புலோலி மேற்கிற்கான உரக்களஞ்சியம் ஒன்றை வண்ணாத்துறையில் அமைப்பதற்கான அடிக்கல் நடும் வைபவம் அண்மையில் நடைபெற்றது.

சைவக் குழந்தைவேல் திரு பொன். மாணிக்கவாசகர் அடிக்கல் நட்டார். (இ-118)

அண்மைக் காலங்களில் ஏற்பட்ட இடர்ப்பாடுகளால் கஷ்டமுற்ற மாணவர்களுக்கு தொழில்வாய்ப்புக்கு உதவும் பொருட்டு யாழ் லயன்ஸ் கழகத்தினரும், த. டேற்று சென்ரர் ஸ்தாபனத்தினரும் கம்பியூட்டர் பயிற்சி நெறி வகுப்புக்களை நடத்தி, அதில் தேறியவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினர் விழாவின் பிரதம விருந்தினரான வைத்திய கலாநிதி ஜே. பி. சி. பிலிப்ஸ் அவர்களது பாரியார் சான்றிதழ் ஒன்றை வழங்குவதை படத்தில் காணலாம்.

அருகில் யாழ் லயன்ஸ் கழக முன்னாள் தலைவரும் இந்நாள் வலயத் தலைவருமான, லயன். ஞா. யுகேந்திரனும் காணப்படுகிறார். (இ)

சிப்பாய்கள் இருவரும் அவர்களது சொந்த இடத்துக்கு அனுப்பப்படுவர்

இராணுவத்தை விட்டு வெளியேறி ஈழப்போராளிகளிடம் சரணடைந்த சிப்பாய்கள் இருவரையும் நாம் நிச்சயமாக அவர்களது சொந்த ஊருக்கு அனுப்பி வைப்போம்.

இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

உண்மையை புரிந்து சம்பளத்திற்காக தமது உயிரைப் பறிகொடுக்க விருப்பம் இன்றி இராணுவத்திலிருந்து எத்தனை பேர் வெளியேறி வந்தாலும் அவர்களை நாம் சுதந்திரமாக அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைப்போம்.

நாம் சாதாரண சிங்களவர்களுக்கு எதிரானவர்கள் அல்லர். சிங்கள அரச இயந்திரங்களுக்கே எதிரானவர்கள். நாம் பயங்கரவாதிகள் அல்லர் என்பதனை நிரூபிப்பதே எமது நோக்கம்.

இப்படி ஈ பி. ஆர்.எல். எப் போராளிகள் தெரிவித்தனர். (இ-76

சாவகச்சேரியில் பயிற்சிவகுப்புகள்

சாவகச்சேரி, செப். 12
சாவகச்சேரி கல்வி வட்டாரப் பாடசாலைகளில் வசதிக்கட்டண அடிப்படையிலும் பாடசாலை அபிவிருத்திச் சபையாலும் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான ஐந்து நாள் பயிற்சி வகுப்புகள் மகளிர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றன.

எண்பத்தேழு ஆசிரியர்கள் பங்கு பற்றிய இப் பயிற்சி வகுப்புகளின் இறுதி நாளன்று பிரதம கல்வி அதிகாரி திரு கே. சோமசுந்தரம், வட்டாரக் கல்வி அதிகாரி திரு. அ. தம்பிராசா ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகள் வழங்கியதுடன் சான்றிதழ்களையும் வழங்கினர். (இ-31)

பொருத்தமான நடிகரை தெரிய வேண்டும்

நாடகவிழாவில் உரை

வட்டுக்கோட்டை, செப். 12
அகதிகள் புனர்வாழ்வுக்காக இன்று மேடையேற்றப்பட்டுள்ள 'சதியா விதியா' நாடகம் மிகப் பழைய பாணியில் அமைந்திருந்த போதிலும் சமூகத்தில் காணப்படும் நிகழ்ச்சிகள் பல இந் நாடகம் மூலம் தெளிவாக்கப்பட்டுள்ளன. நாடகங்களில் இடம்பெறும் பாத்திரங்களுக்கு நடிகர்களைத் தெரிவு செய்யும்போது பொருத்தமானவர்களையே தெரிவுசெய்ய வேண்டும். மாமன் இளைஞராகவும் மருமகன் முதியவராகவும் இருக்கக் கூடாது.

வட்டுக்கோட்டை கலா நிலையத்தினரால் நடத்தப்பட்ட நாடகவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு. இரா சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

சித்தங்கேணி கணேச வித்தியாலயத்தில் வட்டுக்கோட்டை கலாநிலைய முதல்வர் திரு க. கயிலாயநாதன் தலைமையில் விழா நடைபெற்றது.

திரு. சுந்தரலிங்கம் தொடர்ந்து பேசுகையில் பழைய பாணி நாடகங்கள் அருகிவரும் இக்காலகட்டத்தில் திரு. கயிலாயநாதன் பழைய பாணியிலேயே நாடகத்தை அமைத்துள்ளார்.

இந்த நாடகத்தில் இடம் பெற்ற சதி வாழ்க்கையில் விதியாக அமையக் கூடாது.

இந்த நாடகத்தில் பாத்திரப் பொருத்தம் மிகக்குறைவு. இந்த நாடகத்தில் உள்ள சகல பாத்திரங்களையும் பெண்களே ஏற்று நடித்திருப்பது பாராட்டுக்குரியது.

இப்படி அவர் கூறினார்.

உதயன்-சஞ்சிகை பிரதம ஆசிரியர் திரு. ம. வ. கானமயில்நாதனும் மற்றும் பலரும் உரையாற்றினர்.

வட்டுக்கோட்டை கலா நிலைய வெள்ளிவிழாச் செயற்குழுத் தலைவர் திருவாட்டி த. சிதம்பரேஸ்வரி வரவேற்புரை நிகழ்த்தினார்.

வட்டுக்கோட்டை கலா நிலைய பெண்கள் குழுவினரின் சதியா? விதியா? பொன்னாலை இளஞ்சுடர் சனசமூக நிலைய ஆண்கள் குழுவினரின் 'அண்ணை கடத்த ஆறுகள்' ஆகிய இருநாடகங்கள் இறுதிப் போட்டிக்கு விடப்பட்டன.

இப்போட்டியில் 'அண்ணை கடத்த ஆறுகள்' நாடகம் முதலிடத்தைப் பெற்றது. (இ-161)

ஆங்கில தினப்போட்டி அறிவை வளர்க்கிறது

வட்டுக்கோட்டை செ 12
மாணவரிடையே ஆங்கில மொழியில் ஈடுபாட்டை ஏற்படுத்தவும் பேசும் திறனை வளர்க்கவும் எழுதும் ஆற்றலை உண்டு பண்ணவும் ஆங்கில தினப் போட்டியானது பேருதவி புரிகிறது. ஆங்கில மொழி ஓர் உலக மொழி ஆகையால் அதனைச் சகல மாணவர்களும் துறைபோகக் கற்றிருப்பது இன்றியமையாதது

யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையேயான ஆங்கில தினப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்து உரையாற்றிய யாழ். கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு கு சோமசுந்தரம் மேற்கண்டவாறு கூறினார்

பிரதம கல்வி அதிகாரி திரு ஆர். கே குலசேகரம் தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.

யாழ் கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த கல்வி அதிகாரிகள் பலரும் வைபவத்தில் கலந்து உரையாற்றினர்.

யாழ். மாவட்ட வட்டாரப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற வட்டார ஆங்கில தினப் போட்டிகளில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற மாணவர்களே இம்மாவட்டப் போட்டியில் கலந்து கொண்டனர். (இ-161)

துன்னாலை தெற்கில் கோஷ்டிச் சண்டை

கரவெட்டி, செப் 12
துன்னாலை தெற்கில் பல வருடங்களின் பின் மீண்டும் கோஷ்டி மோதல் ஏற்பட்டது.

சம்பவம் பற்றி அறியப்படுவதாவது.

துன்னாலை தெற்கில் இரு கோஷ்டிகளுக்கிடையில் பழைய குடும்பத் தகராறு காரணமாக உருவெடுத்த வாய்ச் சண்டை பெரும் மோதலாக மாறியது.

இதில் சுமார் 10பேர் காயமடைந்தனர்,

இதைத் தொடர்ந்து தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இருபகுதியினரையும் சமாதானம் செய்யும் முகமாக தலையிட்டு பலரை எச்சரித்து விடுவித்தனர்

பின்பு 7பேர் கொண்ட குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

இக்குழுவில் திரு. சி. செல்லையா ஜே பீ., ஆசிரியர் திரு. பீ. செல்லத்துரை, திரு மா. தவயோகம் திரு எஸ் அப்புத்துரை, திரு தம்புராசா, திரு. வே செல்வரத்தினம் ஆகியோர் இடம்பெற்றனர் (இ-70)

நாவாந்துறையில் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம் செப். 12
நாவாந்துறை சென் மேரிஸ் சனசமூக நிலைய வருடாந்த விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

வண. பிதா. பி. எம். இம்மனுவேல் அடிகள் விழாவிற்குத் தலைமை வகித்தார்.

பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி ஜே, பி. சி, பிலிப்ஸ் கலந்து கொண்டார்.

விழாவிற்கான ஏற்பாடுகளை பிரண்டாப சனசமூக நிலையச் செயலாளர் திரு. நீ. அருளானந்தம் [illegible] மேற்கொண்டிருந்தனர். (இ)

காணிக் கொள்கை மத்திய அரசிடம் என்கிறார் காமினி

கொழும்பு, செப் 12
மாகாண சபை இயங்கினாலும் காணிக் கொள்கை மத்திய அரசின் கைகளில் தான் இருக்கும். குடியேற்றத் திட்டங்களை உருவாக்குவது, அவற்றில் குடியமர்த்த ஆட்களைத் தெரிவு செய்வது ஆகிய அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திடம் மட்டுமே இருக்கும்.

இப்படி காணி அமைச்சர் திரு காமினி திஸநாயக்கா சொன்னார்.

யாப்பஹுவா தொகுதியில் நாகொல்லகம [illegible] னும் இடத்தில் நடந்த கூட்டத்தில் பேசுகையில் அமைச்சர் திஸநாயக்கா சொன்னதாவது;

அரசாங்கம் எவரையும் நாட்டை ஆக்கிரமிக்கவும் பிரிக்கவும் விடாது.

துரித மகாவலி அபிவிருத்தி திட்டம் போன்ற நீர்ப்பாசனத் திட்டங்களை மத்தியஅரசு தான் தொடர்ந்து நிர்வகிக்கும்.

இன்று உலகில் எல்லா நாடுகளிலும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டுள்ளன [illegible] (இ-எ)

இலவச மருத்துவ சேவை

பருத்தித்துறை செப். 12
பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் செம்பியன்பற்று, தாளையடி ஆகிய கிராமங்களில் இலவச மருத்துவ சேவை ஆரம்பிக்கவுள்ளது

இதற்கான சகல ஒழுங்குகளையும் பருத்தித்துறை மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி கலாநிதி கே. லலிதகுமாரும் சேவாச்சிரம சுவாமிகள் சித்ரூபானந்தாவும் மேற்கொண்டு வருகிறார்கள்.

இம் மருத்துவ சேவை இம்மாத பிற்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது (இ-118)

சாவகச்சேரியில் பொருட்காட்சி

சாவகச்சேரி செப். 12
சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் கல்லூரி மட்டத்திலான கலை, விஞ்ஞான, கல்விப்பொருட்காட்சி திங்கட்கிழமை நடைபெற்றது.

அதிபர் திரு. பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற பொருட்காட்சியை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. அ. தம்பிராசா மங்கள விளக்கை ஏற்றித் திறந்து வைத்தார். (இ-81)

செய்திக்கொத்து

சேவாச்சிரமம் உதவும்

காங்கேசன்துறை, செப். 12
யாழ். மாவட்டத்தில் உள்ள இராணுவக் கெடுபிடியினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களும், பின்தங்கிய குடும்பங்களும் தகுந்த ஆதாரங்களுடன் விண்ணப்பிக்கும் போது பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் நிவாரண உதவிகளை வழங்கும் என சேவாச்சிரம சுவாமிகள் சித்ரூபானந்தா தெரிவித்தார். (இ-118)

முதலுதவி பயிற்சி வகுப்பு

வேலணை, செப் 12
தீவுப்பகுதியில் உள்ள வேலணை, ஊர்காவற்றுறை நாரந்தனை, சரவணை, கரம்பன், புங்குடுதீவு போன்ற இடங்களில் முதலுதவிப் பயிற்சி வகுப்புகளை நடத்த சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர் முன் வந்திருக்கின்றனர். (இ)

உத்தியோகத்தர் இல்லை

யாழ்ப்பாணம், செப். 12
தெல்லியடி உப-அபிவிருத்தி அலுவலகத்திற்கு கடந்த இரண்டு மாத காலமாக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் இல்லை.

முன்னர் இருந்த உத்தியோகத்தர் இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டதன் காரணமாகவே இந்த வெற்றிடம் ஏற்பட்டது. (இ-10)

மூளாய் சமாதான சபையின் பணி

வட்டுக்கோட்டை, செப். 12
மூளாய் சமாதான சபை சுமார் 70 வழக்குகளை இருபகுதியினரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் சமாதானமாகத் தீர்த்து வைத்துள்ளது

சட்டத்தரணி இ. த. விக்கினராஜாவைத் தலைவராகவும் திரு நா. குமரகுருநாதன் திரு மு. கதிர்காமத்தம்பி, திரு. ப. சிவப்பிரகாசம், திரு த. சுந்தரலிங்கம் ஆகியோரை உறுப்பினராகவும் கொண்ட பஞ்சாயத்தினர் வழக்குகளை நுணுக்கமாக ஆராய்ந்து தீர்ப்புகளை வழங்கி வருகின்றனர்.

மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் வழக்குகள் விசாரணை செய்யப்பட்டு வருகின்றன. (இ1-16(

ஈழத்தின் தமிழ் இதயங்களுக்கு ஓர் இனிமையான செய்தி!

ரெலிபோன்-ரெலக்ஸ் சேவைகள்

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்கின்ற உங்கள் உறவினர்களை அவர்களின் இல்லங்களில் அழைத்து உடனுக்குடன் தெளிவான குரலில் உரையாட குறைந்த செலவில் நிறைவான சேவை செய்ய முன்வந்துள்ளனர்'

மைக்ரோ கொம்யூனிக்கேசன் ஸ்தாபனத்தார்

ரெலிபோன் ரெலக்ஸ் சேவையில் பல வருட கால அனுபவம் பெற்றவர்களின் தொழில் நுட்ப கண்காணிப்பின் கீழ் தங்கள் உன்னத சேவையை இரவு பகல் 24 மணி நேரமும் வழங்குகின்றார்கள்.

உங்கள் தேவையே எங்கள் சேவை

மைக்ரோ கொம்யூனிக்கேசன்

கே.கே.எஸ். வீதி,
குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.

உதய சங்கற்பம்

கலியுகத்தில் உண்மையைக் கடைப் பிடிப்பதே பெருந்தவம். உண்மையைக் கடைப் பிடிப்பதால் ஒருவர் கடவுளை அடைவர்.

— ராமகிருஷ்ண பரமஹம்சர்

உதயன்
உண்மை - அஞ்சாமை - [illegible]

இல. 15 2வது ஒழுங்கை தொலைபேசி 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம், 12-9-1896 த.பெ.இல. 23

காணாமற் போகும் தமிழர்

கைதான பின் காணாமற் போன தமிழர்களுக்கு என்ன நடந்தது? அரசிடம் விளக்கம் கோருகிறது சர்வதேச மன்னிப்புச்சபை.

வடக்கில் காணாமற்போன 108 தமிழரின் நிலை என்ன? விபரம் பெற்றுத் தருமாறு கோரிக்கை.

மேற்கண்டவை உதயனில் அடுத்தடுத்த நாட்கள் வெளிவந்த செய்திகளின் தலைப்புகள்.

சர்வதேச மன்னிப்புசபை லண்டனில் வெளியிட்ட அறிக்கை ஒன்றின் மூலம் கைதாகிக் காணாமற்போன தமிழர்களுக்கு என்ன நடந்தது என்று இலங்கை அரசாங்கத்திடம் விளக்கம் கேட்டிருப்பது பற்றிய செய்தி முதலாவதாகும்.

கடந்த இருபது மாதங்களில் கைது செய்யப்பட்ட தமிழர்களில் 272 பேர் காணாமற் போயுள்ளார்கள். அவர்களுக்கு ஏது நடந்தது என்பது குறித்து உத்தியோக பூர்வமாக அறிவிப்பு இல்லை. கைதாகிக் காணாமற்போனவர்களின் விபரங்களையும் சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

இதே வேளை, பல தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்றும், பல தமிழர்கள் சாகும் வரை சித்திரவதை செய்யப்பட்டார்கள் என்றும் மன்னிப்புச்சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வடக்கில் காணாமற்போன 108 தமிழரின் நிலை குறித்து விவரம் கேட்டிருப்பது செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை.

தேசிய பந்தோபஸ்து அமைச்சு, இராணுவத் தலைமை அலுவலகம், மற்றும் தடுப்பு முகாம்களுடன் தொடர்புகொண்டு அவர்களுக்குஎன்ன நடந்தது என்பது குறித்து அறிந்து சொல்லுமாறு செஞ்சிலுவைச் சங்க யாழ்- கிளை கொழும்பில் உள்ள தலைமை அலுவலகத்தைக் கேட்டிருக்கிறது. காணாமற் போனவர்கள் பற்றியபெயர் விவரங்கள் தலைமை அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.

கைதாகிய பின்னர் காணாமற்போன தமிழர் ஒரு சாரார், கைதானார்களா இல்லையா என்பது தெரியாமலே காணாமற் போன தமிழர் இன்னொரு சாரார்.

அந்த இரு சாரார் குறித்தும் அக்கறையுடன் கேட்டிருப்பவை சர்வதேசப் புகழ் பெற்ற தொண்டர் ஸ்தாபனங்கள்.

இலங்கையில் தமிழர்கள் கொடுமைப்படுத்தப்படவில்லை. அவர்கள் பொருளாதாரக் காரணங்களுக்காகத் தான் மேற்கு நாடுகளுக்குச் செல்கிறார்கள். எனவே அவர்கள் அரசியல் தஞ்சம் என்று கோரிவரும் போது மேற்கு நாடுகள் கவனமாக இருக்க வேண்டும்.

இவ்வாறு அரசாங்கத்தின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ் ஹமீத் அண்மையில் ஹராரேயில் வைத்துத் தெரிவித்தார்

அதனைப் பொய்ப்பிக்கும் விதத்தில் சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையும், செஞ்சிலுவைச் சங்கக் கோரிக்கையும் அமைந்துள்ளன

ஆனால் அரசாங்கம் அவை இரண்டும் ஆதாரமற்ற குற்றச் சாட்டுக்கள் என்று கூறிச் சமாளிக்க முயற்சிக்கலாம்.

யாழ்ப்பாணத்தில் இராணுவம் கடந்த ஐந்து மாதங்களாக முகாம்களுக்குள் முடங்கிக் கிடக்கிறது ஆனால் தமிழ்ப்பகுதிகளின் ஏனைய மாவட்டங்களில் அது சோதனை, தேடுதல், சுற்றிவளைப்பு என்ற போர்வையில் அன்றாடம் பல தமிழர்களைக் கைது செய்து வருகின்றது. அவை பற்றிய செய்திகள் தினமும் வந்து கொண்டிருக்கின்றன.

தமிழர்கள் சந்தேகத்தின் மீது கைது செய்யப்படுகிறார்கள் என்பதும் கேலிக்குரியதாகி விட்டது முகமூடி போட்ட ஒருவர் தலையாட்டினால் போதும். அவர் எழுபது வயது தாண்டிய முதியவராக இருந்தாலும் கைது செய்யப்படுகிறார்.

அவசர காலச் சட்டம், பயங்கரவாதத்தடுப்புச்சட்டம் என்ற போர்வையில் நீதிக்கும், நியாயத்துக்கும் புறம்பான செயல்கள் நடக்கின்றன. தமிழர்கள் பல விதமான நிட்டூரங்களுக்கும் ஆளாக்கப்படுகிறார்கள்.

மனித அடிப்படை உரிமைகள் தமிழர்களுக்குப் பொருந்தாச் சரக்குகள் என்று அரசாங்கம் கருதுகிறது. ஆனால் வெளி உலகுக்குத் தான் ஒரு சாதுவாகக் காட்டிக் கொள்கிறது.

தமிழ் மக்கள் இவை குறித்து எப்படி எடுத்துச் சென்றாலும் அரசின் காதில் விழப்போவதில்லை. சர்வதேச மன்னிப்புச் சபை மனித உரிமைகள் இயக்கம் ஆகியவை இலங்கையில் நடப்பவற்றை வெளி நாடுகளில் பிரசித்தப்படுத்த வேண்டும் இலங்கை அங்கம் வகிக்கும் சர்வதேச ஸ்தாபனங்கள் மூலம் தமிழ் இன ஒழிப்பையும், அவர்களுக்கு எதிரான கொடுமைகளையும் நிறுத்துமாறு நிர்ப்பந்திக்கவேண்டும். வெறும் அறிக்கைகளை வெளியிடுவதால் மட்டும் பயனில்லை; நடக்கப்போவதும் எதுவும் இல்லை.

எம். ஜி. ஆர் ஆரோக்கியம்

வாஷிங்டன், செப். 11

தமிழ்நாடு முதலமைச்சர் எம். ஜி இராமச்சந்திரன் மிகவும் ஆரோக்கியமாக இருப்பதாக அவரைப் பரிசோதித்த டாக்டர்கள் தெரிவித்தனர்.

செய்தியாளர்களை ஆஸ்பத்திரியில் வைத்து எம்.ஜி.ஆர் சந்தித்தார்.

அரசியல் வாரிசு யார் என அவரிடம் கேட்கப்பட்டபோது தாம் நலமாக இல்லையென்று கருதவில்லை எனத் தெரிவித்த எம். ஜீ. ஆர் சமயம் வரும்போது அதை அறிவிப்போம் என தெரிவித்தார். (ஒ)

ஷிமோன் முபாரக் சந்திப்பு

கெய்ரோ, செப். 11

இஸ்ரவேலின் பிரதமர் ஷிமோன் பெரஸ் இன்று அலெக்ஸாந்திரியாவில் எகிப்து ஜனாதிபதி முபாரக் உடன் பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

செங்கடல் தாபா எல்லைப் பிரதேசம் குறித்த பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு மத்தியஸ்த ஏற்பாடுகள் பற்றி அண்மையில் கெய்ரோவில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை தொடர்பாக இவர்கள் இன்று சந்திக்கின்றார்கள்.

டார்ஜிலிங்கில் கடும் மோதல்

10 பொலிஸார் பலி

புதுடில்லி,செப். 11

இந்தியாவின் டார்ஜிலிங் பகுதியில் கூர்க்காக்களுக்கும் பொலீஸாருக்குமிடையில் பலத்த மோதல் ஏற்பட்டது.

இதில் 10 பொலீஸார் பலியாகியுள்ளனர்.

கூர்க்கா தேசிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த ஆயிரம் உறுப்பினர்கள் ஆயுதங்களுடன் இந்த முன்னணியை எதிர்க்கும் கூட்டத்தைக் குழப்ப முயன்றதைத் தொடர்ந்து சேதம் ஏற்பட்டது.

கூர்க்கா தேசிய விடுதலை முன்னணியினர் பலர் காயமடைந்தனர் பாடசாலையொன்றும் தீக்கிரையானது.

நேபாளி மொழி பேசும் கூர்க்காக்கள் பெரும்பான்மையானோரும் டார்ஜிலிங் பகுதியில் தனி ராஜ்யம் ஒன்றை ஏற்படுத்த தீவிரவாதிகள் முயற்சி செய்து வருகின்றார்கள். (ஒ)

சிலியில் முற்றுகைநிலை

பிரகடனப்படுத்தப்பட்டது

ஸந்தியாகோ. செப் 11

சிலி ஜனாதிபதி பினோசேயை கொலை செய்ய எடுக்கப்பட்ட முயற்சியை தொடர்ந்து முற்றுகைநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது

ராணுவ அரசு இதன் மூலம் கைது செய்வதற்கும் தணிக்கைசெய்வதற்கும்பொதுக் கூட்டங்களை கட்டுப் படுத்துவதற்கும் கூடுதலான அதிகாரங்களை பெற்றுள்ளது.

தாக்குதலின் பின்னர் ஜனாதிபதி பினோசே இடது கையில் கட்டுடன் தொலைக்காட்சியில் தோன்றினார். வெடிகுண்டின் சிதறல் அவரைத் தாக்கியதாக அப்பொழுது அவர் தெரிவித்தார்.

பொலீஸாரை தாக்கியமை, அரசாங்கத்தை கவிழ்க்க முயற்சி செய்தமை ஆகிய குற்றச் சாட்டுகளின் பேரில் மூன்று பிரஞ்சு மதகுருமாரும், இரண்டு அமெரிக்க மதகுருமாரும், ஒரு வெளிநாட்டுப் பிரஜையும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இப்படுகொலைச் சம்பவத்தில் முன்னாள் தூதுவரின் மகன் முக்கிய நபராகக் கருதப்படுகின்றார். (ஒ)

ஆங்கிலத்தை தொடர்ந்தும் பயன்படுத்துக

சென்னை, செப் 11

மத்திய நிர்வாகத்தில் ஆங்கிலத்தை தொடர்ந்தும் பயன்படுத்த வகை செய்து அரசியல் சட்டத்தை திருத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது

தமிழ்நாடு சட்டசபை இக்கோரிக்கையை விடுத்துள்ளது.

இம்மாதம் 16 ஆம் திகதியிலிருந்து சகல தொடர்புகளிலும் ஹிந்தி மொழியில் கையெழுத்திடப்பட வேண்டும் என்று மத்திய அரசு அனுப்பியிருந்த சுற்றுநிருபத்துக்கு எதிர் நடவடிக்கையாகவே இந்த கோரிக்கை விடப்பட்டுள்ளது. (ஒ)

ஜப்பான் கொரியா சந்திப்பு

சோல், செப். 11

தென்கொரிய வெளிநாட்டமைச்சர் திட்டமிட்டபடி ஜப்பான் வெளிநாட்டமைச்சரைச் சந்திப்பார்.

ஜப்பானிய பிரதமர் நாகசோனி கல்வி அமைச்சரை பதவி நீக்கம் செய்த பின்பே தென்கொரிய வெளிநாட்டமைச்சர் இந்த விஜயத்திற்கு சம்மதம் தெரிவித்தார்.

ஜப்பானிய கல்வி அமைச்சர் ஜப்பானின் குடியேற்றக் கொள்கைகள் பற்றி சர்ச்சைக்குரிய விடயங்களை தெரிவித்ததனால் இரு நாடுகளுக்குமிடையே பிணக்குகள் ஏற்பட்டிருந்தன.

இருநாட்டு வெளியுறவு அமைச்சர்களின் சந்திப்பு ஜப்பானிய பிரதமர் நாகசோனிக்கும் தென்கொரிய ஜனாதிபதி சுன் டூவானுக்குமிடையே உச்சிமாநாட்டுக்கு வழிகோலும் என நம்பப்படுகிறது (ஒ)

வெளி உலகில்

நிக்கரகுவா இந்தியா ஒப்பந்தம்

இந்தியாவும் நிக்கரகுவாவும் பல்வேறுதுறைகளில் இருதரப்பு ஒத்துழைப்புக்கு உடன்படிக்கை செய்துள்ளன.

ராஜீவ் தாய்லாந்து செல்வார்

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அடுத்த மாதம் தாய்லாந்துக்கு விஜயம் செய்வார்.

அமெரிக்க தலையீடு வேண்டாம்

மணிலா, செப் 11

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி திருமதி அக்கினோ அமெரிக்காவிற்கு விடுத்த வேண்டுகோளில் தமது அரச நிர்வாகத்தில் தலையிடவேண்டாம் எனக் கேட்டுள்ளார்.

எனினும் கம்யூனிஸ்ட் கிளர்ச்சி வாதிகள் தமது சமாதான முயற்சிகளை நிராகரிக்கும் பட்சத்தில் அமெரிக்காவின் உதவியுடன் அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கக்கூடும் எனவும் அக்கினோ தெரிவித்தார்.

எதிர்வரும் திங்கட் கிழமை ஒருவாரகால பயணத்தை மேற் கொண்டு திருமதி அக்கினோ அமெரிக்கா செல்வார். (ஒ)

மக்கள்குறைக்கு அமைப்பு உருவாகும்

நிர்வாகத்துக்கு எதிராக பொதுமக்கள் குறைகளைக் கவனிக்க தனிப்பட்ட அமைப்பு ஒன்றை நிறுவ இந்திய அரசு திட்டமிட்டு வருகிறது.

பீகார் தடைவிதிப்பு

பீகாரிலுள்ள ஒன்பது மருத்துவக் கல்லூரி ஆசிரியர்கள் சொந்த முறையில் தொழில் மேற்கொள்வதை பீகார் அரசு தடைசெய்துள்ளது.

பாரதியாருக்கு வரணசியில் சிலை

சுப்பிரமணிய பாரதியாரின் சிலையொன்று வரணசியில் உப ஜனாதிபதி வெங்கட்ராமனால் திறந்து வைக்கப்பட்டது.

வன்செயலை திருச்சபை ஆதரிக்காது

தென் ஆபிரிக்காவின் ஆங்கிலிக்கன் திருச்சபை வன்செயல்களை ஆதரிக்காது என அதி மேற்றிராணியார் டெஸ்மண்ட் டூட்டு கூறினார்.

ஈரானில் மரண தண்டனை

ஈரானில் கடந்தமாதம் கார் குண்டு வெடிப்புச் சம்பந்தமாக கைது செய்யப்பட்ட மூவருக்கும் அடுத்தவாரம் மரண தண்டனை நிறைவேற்றப்படும்.

நரிகள் பரிகளான பொன்னாள் ஆவணி மூல நன்னாள்

தித்திக்கும் தீந்தமிழ் திருவாசகம் தந்தவர் மாணிக்கவாசகர். ''திருவாசகத்துக்கு உருகார் ஒருவாசகத்துக்கும் உருகார்'' எனுமளவுக்கு மகிமை பொருந்திய அற்புத பனுவல் அதுவாகும்.

திருப்பெருந்துறையிலே பரமாசாரியராய் எழுந்தருளி வந்து தென்னவன் பிரமராயராய் இருந்த திருவாதவூரடிகளை அன்பெனும் வலையில் அகப்படுத்தி ஆட்கொண்டருளினன் எம்பெருமான்.

அரிமர்த்தன பாண்டியனின் அரச கட்டளையைச் சிரமேற்கொண்டு குதிரை வாங்க வென்று புறப்பட்ட புண்ணிய சீலராம் வாதவூரர் பரமகருணைத் தடங் கடலாகிய பரமேஸ்வரனின் பாதாரவிந்தங்களை பணிந்து பணிபுரியும் பேற்றினைப் பெற்றார்.

ஞானக்கதிர்

குதிரை வாங்கக் கொண்டுவந்த நாற்பத்தொன்பதாயிரம் பொன்னையும் நற்றிருப்பணிக்கே செலவு செய்தார். அரன் அடிக்கே நான் சென்று ஆட்பட்டேனே' என்று மெய்தானரும்பி விதிர்விதிர்த்து நிற்கிறார் வாதவூரர்.

அனலிலிட்ட மெழுகுபோல அவர் அன்பொழுகச் சேவை செய்தார் தான் வந்த பணியை மறந்தார். குதிரை வாங்கச் சென்றவரைக் காணவில்லையே என்ற ஏக்கத்தினால் அரசன் ஏவலாளரை அனுப்பினான்.

அரசபணியாளர்கள் வந்ததும் தான் அவருக்கு அரச கட்டளையே நினைவுக்கு வந்தது. ஆற்றொணாத் துயருடன் பரமசாரியனின் பதமலர் பணிந்து அரசன் கட்டளையையும் அவரிடம் பணியையும் விண்ணப்பித்து நின்றார். பக்தனின் தர்மசங்கடமான நிலையை அறிந்த ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் ஜோதியான ஆண்டவன்.

''ஆவணி மூலத்திலே குதிரைகள் வரும்'' என்று சொல்லியனுப்பும்படி பணித்தான். இறைவன் சொன்னபடி. சொல்லி மணிவாசகர் அரசபணியாட்களை அனுப்பி வைத்தார்.

ஆவணி மூல நன்னாளில் நல்ல வெண் புரவிகள் நம்மைநாடி வரும் என்று மகிழ்ந்திருந்தான் பாண்டிய மன்னன்.

ஸ்ரீநிதர்ஸன்

ஆடையிலுள்ள அழுக்குப் போகவேண்டுமென்றால் நன்கு அடித்துத் துவைக்க வேண்டும் அப்போதுதான் அது அழுக்கு நீங்கி நல்ல வெண்மையாக வரும்.

அதே போலத்தான் வாதவூரருக்கும் இறைவன் பலத்த சோதனைகளைக் கொடுத்தான் அவரின் பக்குவ நிலையை அறிவதற்காக காலத்தாழ்த்தி பின்பு கருணை புரிந்தார் கடவுள்

மலநீக்கம் பெற்ற மணிவாசகர் மதுரை வாழ் பாண்டியன் மந்திரிப்பதவியை மறந்தார். கருணாநிதியாம் கடவுளின் கருணைத் திறத்தை எண்ணி எண்ணி இறும்பூதெய்தினார்.

ஆவணி மூல நன்னாளும் வந்தது. புழுதி கிளம்பப் புரவிகளாவும் அணிவகுத்து இனம் பிரா. அவைகள் எல்லாம் உண்மையில் புரவிகளல்ல அதிலும் புரளி தான் செய்தார் பெருமான்.

காட்டிலேயுள்ள நரிகளையெல்லாம் பரிகளாக்கி மன்னவனின் அன்றாடத் தேவைக்கு அணிசெய்து முகமாக பக்தரைக் காக்கும் நோக்குடன் இயங்கினன் இறைவன்.

வாதவூரரின் வாக்கு காப்பாற்றப்படுவதுடன் மன்னவனின் தேவையும் நிறைவேற வேண்டும். அத்துடன் திருவிளையாடல் செய்வது சிவனின் திருவிளையாட்டாகும்.

மந்திரிப்பதவியினின்றும் மணிவாசகரை மீட்டெடுத்து மதி தலங் குளிரும் மணியான திருவாசகத்தை மக்களுக்கு அளித்தான் மதிசூடிய பெருமான்.

இந்த ஆவணிமூல நன்னாளில் ஆண்டவனைப் பணிந்து அவனருளாலே அவன்றாள் பணிய அவனருளையே நாடிடுவோம்.

இன்றைய இசைவிழா நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம் செப். 12

யாழ் மாவட்டக் கலாசாரப் பேரவையின் ஆதரவில் இசைவிழா இன்று வெள்ளிக்கிழமை நல்லை ஆதீனத்தில் ஆரம்பமாகும்.

இம் மாதம் 16 ஆம் திகதி வரை தொடர்ந்து இசைவிழா நடைபெறும்.

தினமும் பிற்பகல் 4-30 மணி முதல் இரவு 8 மணி வரை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

இன்றைய நிகழ்ச்சி

மாலை 4-30: எம். பஞ்சாபிகேசன் குழுவினரின் நாதஸ்வரம்.

5-30; ஆசியுரை-நல்லை ஆதீன குருமகா சந்நிதானம். தலைமையுரை யாழ் அரச அதிபர் திரு வி. எம் பஞ்சலிங்கம்.

5-45; திரு. என். வி. எம். நவரத்தினம் - பண்ணிசை, திருமதி ஞானம்பிகை பத்மசிகாமணி - வயலின், திரு.ஜே. சண்முகாநந்த சர்மா - மிருதங்கம்.

6-45; திரு. எஸ். கணபதிப்பிள்ளை - வாய்ப்பாட்டு, திரு. ஆர். சந்தானகிருஷ்ணன் வயலின், திரு. ரி. பாக்கியநாதன் - மிருதங்கம். (இ-எ)

சமய சந்நிதிகளில்

ஐயனார் ஆலய கும்பாபிஷேகம்

புங்குடுதீவு, செப்.12

புங்குடுதீவு வல்லன் அரிகரப்புத்திர ஐயனார் ஆலய மகாகும்பாபிஷேகம் இம் மாதம் 15ஆம் திங்கட்கிழமை காலை 10மணிக்கு நடைபெறும். பல இலட்சம் ரூபா செலவில் இந்த ஆலயம் அண்மையில் புனருத்தாரணம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இம்மகா கும்பாபிஷேகம் நிகழ இருக்கிறது.

2000 ஆம் ஆண்டு பிறந்ததின விழா

இளவாலை, செப்.12

இளவாலை சாந்தனூர் ஆலயத்தில் தேவதாயின் 2000ஆம் ஆண்டு பிறந்த தின விழா நவநாள் கொண்டாட்டத்தின் கடைசித் திருவிழா காலை நடந்தேறியது.

காலை அருள் திரு இராசநாயகம் அடிகளார் தலைமையில் கூட்டுத் திருப்பலி நிறைவேற்றப்பட்டு திருச்சுரூபப்பவனி பெருந்திரளான பக்தர்கள் புடைசூழ நடைபெற்றது.

அருள் திரு பத்திநாதன் ஞானப்பிரகாசம் அடிகளார் ஒன்பது நாட்களாக அருளுரை வழங்கினார்.

கோவில் அத்தியேட்சகர் அருள்திரு பி. எல். பற்றிக் அடிகளார் விழாவுக்கு முழுப் பொறுப்பாயிருந்து திறம்பட நடத்தி வைத்தார். (இ-48)

வாசகர் திருமுகம்

அராலியில் உவர்த் தன்மை நீங்க வழி

''அராலிப் பகுதியில் பம்பாய் வெங்காயச் செய்கை'' என்ற தலைப்பிலான ஒரு செய்தி 1- 9- 86 உதயனில் வெளிவந்திருந்தது.

அதில் ''பம்பாய் வெங்காயச் செய்கை உவர்த் தன்மையால் பாதிப்பு - நீண்டகால வரட்சி காரணம்'' என்றிருந்தது தங்கள் செய்தி. உண்மை தான்.

வரட்சிக்கு காரணகாரியங்களை ஆராய வேண்டும். அல்லது 55 வருடங்களுக்கு முன் தெற்கு அராலிக்கும் மேற்கு அராலிக்குமிடையில் ஒரு செமிம குளம் இருந்தது. அக்கால மக்கள் இக் குளத்தின் நீளம் ஏறக்குறைய ஒரு மைல் இருக்குமென்பர்.

இக் குளத்தின் சுற்றுடலே பயிர்ச் செய்கைக்குச் சிறந்த இடமாக விளங்கியது. குளம் அக்காலத்தில் அதிக ஆழமானதாக இருந்தது. மழை காலத்து நீரைத் தேக்கி வைத்து முற் காலத்தவர் உபயோகித்தனர்.

இப்போது இந்தக்குளம் நாலு பக்கங்களிலும் உள்ள வயல் சொந்தக்காரர்களால் ஒதுக்கி ஒதுக்கப்பட்டு வெகுவாகச் சுருங்கி விட்டது. குளமும் மண் நிறைந்து மேடாகக் காட்சியளிக்கிறது.

அக்கம் பக்கத்து வயல்களெல்லாம் பள்ளமாக இருக்கின்றன. அக்குளத்தைதோண்டி மண்ணெடுத்து ஆழமாக்கி மழை நீரைத் தேக்கி வைப்பாரில்லை. அக் குளம் விஸ்தரிக்கப்பட வேண்டும். அப்படிச் செய்யாததால் அப்பகுதியில் உவர்த்தன்மை மேலோங்குகிறது.

முற்காலத்து நீளம் அகலத்துக்கு அமையக் குளத்தைத் தோண்டி நாற்புறமும் கற்சுவர் எழுப்பி நீரைத் தேக்கி வைக்க நடவடிக்கை எடுத்தால் உவர்த்தன்மையை இல்லாது போகச் செய்யலாம்.

அராலி மக்கள் சிரமதான மூலமோ, அபிவிருத்திச் சபை மூலமோ அல்லது வேறு எந்த விதத்திலோ குளத்தைத் தோண்டி ஆழமாக்க வழி வகைகள் செய்யவேண்டும்.

வெ க. நடராசா
நல்லூர்

பனை வளம் பெருக்கி உள்ளூர் உற்பத்தியை

ஊக்குவிப்பது அவசியம்

சுன்னாகம், செப்.12

பனை வளத்தைப் பெருக்கி உள்ளூர் உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்த வேண்டும். நாம் ஒவ்வொருவரும் பனையை கண்டபடி வெட்டி அழிக்காமல் பாதுகாத்து, வளர்த்து பலன் பெற்று உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்க வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் பனம் விதைகளை நட்டு உரிய முறையில் பராமரித்தல் அவசியமானது.

யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவன முகாமையாளர் திரு. தெ. விக்னேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

உடுவில் வை. எம். சீ. ஏயின் ஆதரவில் பனம் பொருள் அபிவிருத்திச் சபையினால் நடத்தப்பட்ட பனம் பொருள் உற்பத்திகளின் கண்காட்சியை திரு. விக்னேஸ்வரன் திறந்து வைத்தார்.

இக் கண்காட்சியில் பனையில் இருந்து பெறப்படும் பானங்கள், வெல்லங்கள், மதுவகைகள், மற்றும் கைவேலைப் பொருள்கள், முதலியன பார்வையாளர்களின் கவனத்தை பெரிதும் கவர்ந்தன. (இ-27)



பொய்யாமொழி

குறள்:

படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்காது ஒன்றன்
உடல்சுவை உண்டார் மனம்.

பொருள்:

ஓர் உயிரின் உடம்பைச் சுவையாக உண் [illegible] கொண்டவன் நெஞ்சம்போல் நன்மை [illegible]

உதயன்

12-09-1986 வெள்ளிக்கிழமை

ஸ்ரீ சத்ய சாயி பாபாவின்
61வது பிறந்த தின விழா
புட்டப்பர்த்தி செல்லுதல் விமான டிக்கட்
ரூபா 2298/- + ரூபா 317/- மாத்திரமே.
பாங்கொக், சிங்கப்பூர் உல்லாச சுற்றுலா
25-11-86 தொடக்கம் 10 நாட்கள்
ரூபா 16200/- மாத்திரமே.
ராஜா டூர்ஸ் வி அமிர்தேஸ்வரராஜா
அதிபர், சமாதான நீதிவான்.

தென் இந்திய தல யாத்திரை
23-12-86 தொடக்கம் 12 நாட்கள்
விமான டிக்கட் ரூபா 2298/-+ரூபா 2902/-
மாத்திரமே.
ராஜா டூர்ஸ்
168/1, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்-
போன்: 23374
(approved by Govt. Tourist Board)

எரி பொருள் நியாயவிலைக்கு

புலிகளும் ஆதரவு

மீறுவோர் மக்கள் விரோதிகள் என அறிக்கை

யாழ்ப்பாணம், செப்.12

நியாயமான ஒரு விலையில் எரிபொருள் விற்பனை செய்யப்படுவதை ஆதரித்து தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தனர்.

அறிக்கை விவரம் வருமாறு:-

தனியார் விருப்பப்படி கொள்ளை இலாப நோக்கோடு நாளுக்கு நாள் எரிபொருள் விலையில் ஏற்ற இறக்கம் செய்யப்படுகிறது.

சமுதாய ரீதியாக ஏற்பட்டுள்ள இந்த ஒழுங்கீனத்தைக் கட்டுப்படுத்துமுகமாகவும் எம்மக்களின் நலன்களை முதன்மைப்படுத்துமுகமாகவும் அத்தியாவசிய தேவைகளுள் ஒன்றான எரிபொருளை இன்று வியாழக்கிழமை முதல் நியாயமான கட்டுப்பாட்டு விலைக்கு விற்பனை செய்தல் வேண்டுமென சகல எரிபொருள் விற்பனையாளர்களுக்கும் அறிவுறுத்துகிறோம்.

கட்டுப்பாட்டு விலை வருமாறு:-

பெற்றோல் - லீற்றர் 17 50, போத்தல் ரூ13.46
டீசல் — லீற்றர் ரூ.12.00, போத்தல் ரூ 9 23
மண்ணெண்ணெய்— லீற்றர் ரூ 10 00, போத்தல் ரூ 7 70

இன்று முதல் இந்தக் கட்டுப்பாட்டு விலை விற்பனை அமுலில் இருக்கும். இதனை மீறுவது ஓர் மக்கள் விரோத செயற்பாடாகவே கருதப்படும்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

கோப்பாய் - கைதடி பாலத்தில் மீண்டும் திருத்த வேலைகள்

யாழ்ப்பாணம், செப் 12

கோப்பாய் — கைதடி பாலத்தில் மீண்டும் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதனால் இப்பாதையில் போக்குவரத்துத் தடைப்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்று இப்பாதை வழியாக மிகவும் சிரமத்துடனேயே வாகனங்கள் சென்றன.

பாடசாலைகள் தவணை விடுமுறையின் பின்னர் மீண்டும் ஆரம்பமான வேளையில் இந்த நிலைமை ஏற்பட்டது குறித்து இப்பாதை வழியாகப் பிரயாணம் செய்யும் ஆசிரியர்களும் மாணவர்களும் கவலை தெரிவிக்கின்றனர். (இ.10)

திறப்பு விழா

யாழ் நகரின் நவீன சந்தையில்
இல 67, 68ம்
அமைந்திருக்கும்
'லக்கி பிளாஸா'
இன்று

பி. ப. 2. 30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டு தனது வியாபாரத்தை ஆரம்பிக்கவுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அந்நேரம்
அன்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

எம்மிடம் றேடியோ, டிவி, மணிக்கூட்டு வகைகள், பேபி ஐட்டங்கள், மின்சார மின்னியல் பொருள்கள் மற்றும் பல வகையான பென்சி பொருட்கள் நிதான விலைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

தொலைபேசி 23509

நிஷான்
இன்ரநாஷனல் சேவிஸ்
Nishan International Service
ரெலிபோன், ரெலக்ஸ் சேவையும்

இலவச தந்தி

சேவையும்
24 மணி நேரமும் பாதுகாப்பான
சுற்றாடலில் நடைபெறுகிறது.

யாழ். குடாநாட்டில் ஏற்பட்டிருக்கும் தபால் நிலையங்களின் சீர்கேட்டினால் வெளி மாவட்டங்களிலும், வெளிநாடுகளிலும் இருந்து எமக்குத் தரப்படும் தகவல்களை இலவசமாகத் தகவல் கொடுப்பதற்கு நாம் தயாராக உள்ளோம்.

எனவே யாழ். குடாநாட்டில் இருக்கும் சனசமூக நிலையங்களை எம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

உங்கள் தேவை எமது சேவை!

நிஷான் இன்ரநாஷனல் சேவிஸ்
இல. 946 சட்டநாதர் கோவிலடி,
பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
ரெலிபோன்: 24356

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15-ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 12 • 09 • 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road, JAFFNA,

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Numder QJ 60 N86

பென்ஷன் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், செப்.12

செப்டம்பர் மாதப் பென்ஷன் அஞ்சல் அலுவலகம் மூலம் பெறுவோர் பின்வரும் திகதிகளில் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

15. 9. 86 - புங்குடுதீவு, சுழிபுரம், வட்டுக்கோட்டை
18. 9. 86 - யாழ்ப்பாணம், (யாழ் மாநகர சபை எல்லைக்குள் உள்ள அஞ்சல் அலுவலகங்கள் மூலம் பென்ஷன் பெறுபவர்கள்)
19 9. 86 - சங்கானை, கைதடி, அளவெட்டி, [illegible] பண்ணை.
22 9. 86 - கரவெட்டி, ஊர்காவற்றுறை, அச்சுவேலி.
23. 9. 86 - வசாவிளான், கொக்குவில், சுன்னாகம்.
24 9 86 - பருத்தித்துறை, அனலைதீவு, நயினாதீவு.
25. 9 86 - நெடுந்தீவு, வல்வெட்டித்துறை, கொடிகாமம்.
26 9. 86 - சாவகச்சேரி, காங்கேசன்துறை, காரைநகர்.
29. 9. 86 - கோப்பாய், மானிப்பாய், பண்டத்தரிப்பு.
30. 9. 86 - தெல்லிப்பழை, உரும்பிராய், வேலணை, யாழ்ப்பாணம் (உ-எ)

அரசியல்:::

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றதாம்.

வெடிச்சத்தங்களைக் கேட்ட பொலீஸ் கமாண்டோக்கள், தீவிரவாதிகள்தான் சுடுகிறார்கள் என்று அஞ்சி, துப்பாக்கிப் பிரயோகம் செய்யத் தொடங்கினார்களாம்.

பொலீஸ் கமாண்டோக்களின் துப்பாக்கிப் பிரயோகத்தைக் கேட்ட ஆயுதம் தரித்த முஸ்லிம்கள் கோஷ்டியும் தீவிரவாதிகள் வந்துவிட்டார்கள் என்று கருதி சரமாரியாக சுடத்தொடங்கினார்கள்.

இரு தரப்பினரின் துப்பாக்கிப் பிரயோகங்களுக்குள் சிக்கிய முறைதீன் பாவா என்ற பிரஸ்தாப 75 வயது மூதாட்டி சூடுபட்டு உயிரிழந்தார்.

மரண விசாரணை நடத்திய கல்முனை நீதவான் ஜனாப் தாஹா செய்னுடீன் கொலை என்று தீர்ப்பு அளித்தார்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து பழைய இடங்களில் குடியிருக்கச் சென்ற தமிழ் அகதிகள் மீண்டும் அகதி முகாம் திரும்பினர். (உ-எ-84)

ராஜீவின்--

(1ஆம் பக்க தொடர்ச்சி)

உதவி தொடர்ந்து இருக்கும் என்று திரு டிக்ஸித் ஜனாதிபதிக்கு கூறினார் என்றும் தெரியவருகின்றது.

பேச்சுக்கள் நடக்கும் சமயத்திலும் வடபகுதியில் தீவிரவாதிகள் தொடர்ந்து தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றார்கள் என்று ஜனாதிபதி, இந்தியத் தூதரிடம் கூறினாராம்.

இந்திய உதவியுடன் இனப்பிரச்சினைக்குப் பேச்சுக்கள் மூலம் தீர்வு காணும் நடவடிக்கையில் இலங்கை அரசு தொடர்ந்து ஈடுபடும் என்றும் ஜனாதிபதி, இந்தியத் தூதரிடம் உறுதிபடக் கூறினார்.

— இப்படி ராஜதந்திர வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இந்தியத் தூதர், தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலியையும் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார். (உ-எ)

போராளி-

(1ஆம் பக்கதொடர்ச்சி)

இருக்கிறது.

அமைச்சரவை, அரசாங்க நாடாளுமன்றக் குழு ஆகியவற்றில் உள்ள 'கடும்போக்கு' உடையவர்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும், பேச்சுக்கள் மூலம் காணப்படும் தீர்வை அமுல் நடத்துவோம் என்ற உறுதிமொழியைத்தான் இலங்கை அரசிடம் இருந்து இந்தியா எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் இப்படித் தெரிவித்தன.

அந்த உறுதிமொழியை இலங்கை அரசிடம் இருந்துபெறும் நோக்கத்துடன்தான் இந்தியப் பிரதமர், கடுமையான விமர்சனம் ஒன்றை ஹராரேயில் வைத்து வெளியிட்டார் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (அ-ஐ-எ)

தாளங்குடாவில்-

(1ஆம் பக்க தொடர்ச்சி)

ஜண்ட் புத்ததாஸ(வயது 37), கான்ஸ்டபிள் பியசேன (25 வயது) ஆகியோர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

படுகாயமடைந்த கான்ஸ்டபிள்களான லக்ஷ்மண், குணநாயக, சாங்ஹதஸ ஆகியோர் விமான மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

காயமுற்றவர்களான மேலும் 5 கான்ஸ்டபிள்கள் பொலன்னறுவ ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

இச்சம்பவம் இடம்பெற்ற பகுதிக்கு மட்டக்களப்புப் பகுதியில் இருந்து மேலதிக படையினர் அனுப்பிவைக்கப்பட்டனர்.

நகரம்
வெறிச்சோடியது

இதைத் தொடர்ந்து மட்டக்களப்பு நகரம் வெறிச் சோடியது. மட்டக்களப்பில் இருந்து கல்முனை சென்ற வாகனங்கள் காத்தான்குடியுடன் திரும்பி விட்டன. [illegible] வாகனங்களும் [illegible] திரும்பின. (உ-எ-21)

சனசமூகநிலைய திறப்பு விழா

யாழ்ப்பாணம்.செப்12

நாவற்குழி சித்திவிநாயகர் சனசமூக நிலைய திறப்புவிழா இன்று மாலை ஆறு மணி அளவில் நடைபெறுகிறது.

ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு. நா. செ. நாகரத்தினம் வைபவத்துக்கு தலைமை வகிப்பார்.

கலாநிதி வெ. திருஞானசம்பந்தர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ)

இறங்க மறுத்த பெண் சுட்டுக் கொல்லப்பட்டார்

பயணிகள் வான் கடத்தல்

யாழ்ப்பாணம், செப்12.

இறங்க மறுத்த பெண் பயணி ஒருவரை சுட்டுக் கொன்றுவிட்டு வான் ஒன்றை இனந் தெரியாதோர் கடத்திச்சென்றனர்.

வவுனியா மாவட்டத்தில் மூன்று முறிப்பு என்ற இடத்தில் இச்சம்பவம் நடந்தது.

சம்பவம்பற்றிக் கூறப்படுவதாவது:-

அதிகப்படியான பயணிகளுடன் வான் ஒன்று [illegible] நோக்கிச் சென்றுகொண்டிருந்தது.

மூன்று முறிப்பு என்ற இடத்தில் ஆயுதம் தாங்கிய இனந் தெரியாத கோஷ்டியினர் வானில் இருந்த பயணிகள் அனைவரையும் இறங்குமாறு பணித்தனர்

வானில் இருந்த அனைவரும் இறங்கியபின் பெண் ஒருவர் மட்டும் இறங்க மறுத்தார்.

ஆத்திரம் அடைந்த கோஷ்டியினர் பெண்ணைச் சுட்டுக் கொன்றுவிட்டு வானைக் கடத்திச் சென்றனர்.

வீதியில் விட்டுச் செல்லப்பட்ட பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பிரஸ்தாப பெண்ணின் சடலத்தை ஆயுதப் படையினர் மீட்டெடுத்து வவுனியா ஆஸ்பத்திரியில் சேர்த்தனர் (இ-10)

பூங்காவினுள் நுழைந்த கறுப்புச் சட்டைக்காரர் மீது புளொட் தாக்குதல்

யாழ்ப்பாணம்,செப் 12

யாழ் கோட்டையை விட்டு வெளியேறிய கறுப்புச் சட்டைக்காரர்களை நோக்கி புளொட் போராளிகள் தாக்குதல் நடத்தினர்.

இந்தச் சம்பவம் புதன் கிழமை காலை நிகழ்ந்தது.

கோட்டையை விட்டு வெளியேறிய கறுப்புச் சட்டைக்காரர்கள் பொலீஸ்நிலையப் பக்கமாக வந்து சுப்பிரமணியம் பூங்காவினுள் நுழைந்தனர்.

இவர்களை எதிர்கொண்ட போராளிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதனை அடுத்து கறுப்புச் சட்டைக்காரர்கள் முகாமுக்குத் திரும்பிச் சென்றனர். (இ-10)

புலிகள்-

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களை மேற்கொண்டன.

காரைநகர் தபாற்கந்தோர் அருகேயும் குடிசனப்பகுதிகள் நிறைந்த இடங்களிலும் ஷெல் குண்டுகள் விழுந்து வெடித்தன.

ஷெல் தாக்குதலினால் ஒருவர் காயமடைந்ததாகவும் தெரியவருகிறது.

இதேவேளை ஹெலிக்கொப்டர்களில் இருந்து நடத்தப்பட்ட தாக்குதல்களினால் கரையை அண்டிய பகுதிகளில் உள்ள பல வீடுகள் சேதமடைந்திருப்பதாகவும் கூறப்படுகிறது

இத்தாக்குதல்களை அடுத்து காரைநகர் யாழ்ப்பாணம் போக்குவரத்துச் சேவைகள் சில மணி நேரம் ஸ்தம்பிதமடைந்தன

புலிகளின் எதிர்த்தாக்குதல்களை அடுத்து கடற்படையினரின் படகுகளும் ஹெலிக்கொப்டர்களும் கடல் விமானம் ஆகியவையும் திரும்பிச் சென்றதாகவும் தெரியவருகிறது

இந்தத் தாக்குதல்களில் புலிகள் தரப்பில் சேதம் ஏதும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது (உ-10)

டாக்டர்-

)1ம் பக்கத் தொடர்ச்சி)

ளர் பகுதியையும் வார்ட் வேலைகளையும் தாதியர்கள் மேற்பார்வை செய்தார்கள்.

இதனால் நோயாளர் பாதிக்கப்படவில்லை எனத் தெரிகிறது. (இ-118)

பருத்தித்துறை-

1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம் பெயர்ந்து வருகின்றனர்

செய்தி எழுதும் வரை துப்பாக்கி வேட்டுக்கள் தொடர்ந்து இடம் பெற்றுக் கொண்டிருந்தன சேத விபரம் தெரியவில்லை. (இ-118)

இம்மாத பென்ஷன் துரையப்பா அரங்கில்

வழங்கப்படமாட்டாது

யாழ்ப்பாணம், செப்12

அஞ்சல் அலுவலகங்கள் மூலம் வழங்கப்படும் பென்ஷன் இம்மாதம் யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் வைத்து வழங்கப்படமாட்டாது.

அதற்குப் பதில் யாழ் கோட்டைக்கு அருகில் உள்ள அஞ்சல் அலுவலகத்தின் பக்கத்து அறையில் வைத்து வழங்கப்படும் என்று யாழ் தபால் அத்தியட்சகர் அறிவித்துள்ளார்.

புதிய இடம் பற்றி அவ்வப்பகுதி அஞ்சல் அதிபரைத் தொடர்பு கொண்டு அறிந்துகொள்ளலாம் என்று பென்ஷன்காரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (உ-எ)

ஷெல் தாக்குதலால்

வை. டபிள்யூ சி. ஏ. கட்டடமும் சேதம்

யாழ்ப்பாணம், செப். 12

யாழ் கோட்டையில் இருந்து சமீபத்தில் ஏவப்பட்ட ஷெல்களினால் திம்மர் மண்டப வளவில் அமைந்துள்ள மெதடிஸ்த சபைக்குச் சொந்தமான வை டபிள்யூ. சி. ஏ கட்டடமும் சேதம் அடைந்துள்ளது.

யாழ்ப்பாணம் வந்திருந்த சமயம் மெதடிஸ்த தலைவர் திரு [illegible] இதனைத் திறந்து வைத்திருந்தார்.

யாழ் மாநகர தீயணைப்புச் சேவையை வைபவ ரீதியாகத் திறந்து வைக்க யாழ்ப்பாணம் வந்திருந்த சமயமே மெதடிஸ்த தலைவரால் இந்த வை டபிள்யூ. சி. ஏ. கட்டடமும் திறந்து வைக்கப்பட்டது (இ)

மின்கம்ப சடலங்கள்

மட்டக்களப்பு, செப். 12

மட்டக்களப்பில் இரண்டு குடும்பஸ்தர்கள் வெட்டப்பட்டு இரண்டு சந்திகளில் சடலங்கள் கட்டிவைக்கப்பட்டன.

இராசனைச் சேர்ந்த 38 வயதான சோமசுந்தரத்தின் சடலம் செங்கலடிச் சந்தியில் உள்ள மின்கம்பத்தில் கட்டிவைக்கப்பட்டது.

மீராவோடையைச் சேர்ந்த நடேசன் என்பவரின் சடலம் வாழைச்சேனை பெற்றோல் நிலையச் சந்தியில் உள்ள மின்கம்பத்தில் கட்டி வைக்கப்பட்டிருந்தது. (உ-எ-21)

தமிழர் மீது தாக்குதல் நடத்த விடமாட்டோம்

முஸ்லிம் பிரமுகர் பிரதிக்ஞை

கல்முனை, செப் 12

தமிழர்மீது தாக்குதல்களை நடத்த விடமாட்டோம். அப்படி நடப்பதானால் எமது பிரதேசத்தின் மீதுதான் நடக்க வேண்டும்.

இப்படி கல்முனையின் பிரபல முஸ்லிம் வர்த்தகரான ஜனாப் குழந்தை மரைக்காயர் நேற்று நடந்த சமாதான சபைக் கூட்டத்தில் பிரதிக்ஞை எடுத்தார்.

கல்முனை விவேகானந்த வித்தியாலயத்தில் நடந்த இக்கூட்டத்துக்கு உதவி அரச அதிபர் ஜனாப் மொஹிடீன் தலைமை வகித்தார்

பத்து முஸ்லிம்களும் பத்து தமிழர்களும் கொண்ட சமாதானக் குழு இக் கூட்டத்தில் அமைக்கப்பட்டது.

கல்முனை தமிழ் அகதிகள் புனர்வாழ்வுச் சபைத் தலைவர் சட்டத்தரணி ஜி குமாரலிங்கம் கூட்டணிப் பிரமுகர் ஆ வேல்முருகு ஆகியோரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். (உ-எ-84)

இந்திய மாநிலமாக இலங்கை மாறுவதை

தடுப்பது சிங்களவர் கடமை

அஸ்கிரிய பீடாதிபதி கூறுகிறார்

கொழும்பு, செப் 12

இந்தியாவின் கீழ் இலங்கை ஒரு தனி மாநிலமாக வருவதைத் தடுப்பதே இன்று சிங்களவரின் கடமையாக இருக்கவேண்டும்.

—இப்படிச் சொன்னார், அஸ்கிரிய பீடாதிபதி வணபலிபான சந்திரானந்த மகாநாயக்க தேரர்.

ஹராரேயில் வைத்து பிரதமர் ராஜீவ்காந்தி வெளியிட்ட குற்றச்சாட்டு, இந்தியா உண்மையான மத்தியஸ்த முயற்சியில் ஈடுபடவில்லை என்பதைப் புலப்படுத்துகின்றது.

இலங்கை பயங்கர எதிர்காலம் ஒன்றை எதிர்நோக்கி உள்ளது.

இந்த நிலையில் மாகாண சபைகளை எதிர்க்க 3 பௌத்த மதபீடங்களும் ஒருங்கிணைந்து செயல்படுவது மகிழ்ச்சி தருகின்றது.

— இப்படி கருத்து வெளியிட்டார், அஸ்கிரிய பீடாதிபதி. (உ-ஐ-எ)

தொண்டமனாறு முகாமிலிருந்தும் ஷெல் தாக்குதல்

பருத்தித்துறை, செப். 12

தொண்டமனாறு இராணுவ முகாமிலிருந்து நேற்றுமாலை 3.00 மணி முதல் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. (இ-118)

சன்மானம்

வாஷிங்டன், செப் 10

கராச்சி விமான நிலையத்தில் 18 பேரை கொலை செய்ததற்கும், இஸ்தான்புல் தேவாலயத்தில் 21 யூதர்கள் கொல்லப்பட்டதற்கும் பொறுப்பாக இருந்தவர்களை அடையாளம் காட்டிக் கொடுப்பவர்களுக்கு பாரிய சன்மானம் வழங்கப்படும்.

இவ்வாறு நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை தெரிவித்தது.

தடை

[illegible] செயல்களை சித்திரிக்கும் திரைப்படங்களை அந்தரங்கமாக திரையிடுவதும் வீடியோ மூலம் பதிவு செய்து விநியோகிப்பதும் மிகவும் பாரதூரமான குற்றங்களாக ரஷ்யா பிரகடனப்படுத்தியுள்ளது.

தெல்லிப்பழையில்
சகாய விற்பனை

தெல்லிப்பழை துர்க்கா தேவி தேர்த்திருவிழா] தீர்த்த திருவிழா 14 . 9 . 86 / 15. 9 86, மில்க்வைற் விளம்பர வாகனத்தில் ரூ. 15/ற்கு மில்க்வைற் தயாரிப்புகளை வாங்கும் அன்பர்களுக்கு ஸ்ரீ துர்க்கா தேவி அஷ்டகம், அபிராமி அந்தாதி, சால்வை ஸ்ரிக்கர். அறிவு நூல்களும் சொலித்தில் பார்க்கும் அன்பளிப்பாக வழங்கப்படும். மேலுறைகள் சேகரித்துவைத்திருக்கும் அன்பர்கள் அங்கு கொடுத்து உயர்ந்த பரிசுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

மில்க்வைற்
யாழ்ப்பாணம்

மோதல் தொடர்கிறது

யாழ்ப்பாணம்,செப் 12

படுவான்கரைப் பகுதியில் படையினரை முன்னேற விடாது தாம் தொடர்ந்து பலத்த தாக்குதல் நடத்தி வருவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று அறிவித்தனர்.

இப்பகுதியில் சக இயக்கம் ஒன்றின் முகாம் ஒன்றைப் படையினர் முற்றுகையிட்டுத் தாக்கியிருப்பதாகவும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (உ)

A/L 87
Day Paper Class
திங்கள் — வெள்ளி
6-30 — 8-30
தூய) கணிதம்
பிரயோக)
A. பத்மநாதன்
ஆரம்பம்: 15-9-86
NIRU
Kondavil.

A/L 88
தாவரவியல்
அஞ்ஜியோஸ்பேர்மின்
பிரிவுகள்
Mr. பாலா
ஆரம்பம் 13-9-86
சனி 6-00 காலை
Niru Tuition Centre